...ப்பு

விழிப்புணர்வு
மாசிகை

# சூழல்சுடர்

மாசி - 1993 **2**

"மன்ற, 43- புகையிரத நிலையக் குறுக்கு வீதி, மட்டக்களப்பு.



மட்டக்களப்பு மாவட்டச் சூழல் மகத்துவம் விளக்க படவும், சூழலின்டாகும் தாக்கங்களை வெளிக் கொணரவும் "சூழல் விழிப்புணர்ச்சி மன்றம்" இவ்விதழை மாதம் ஒரு முறை விரிக்கிறது.

"ஒவ்வொரு மரமும் மனிதர்க்குப் பல பாடங்களைக் கற்றுத் தருகின்றது. ஆனால், மனிதர்களோ அவற்றைக் கற்றவுடன் மறந்து விடுகிறார்கள்"

'கண்ணதாசன்'

## மட்டக்களப்பு மாவட்டத்தின் வளங்களைக் காப்போம்

மட்டக்களப்பு மாநிலம் வளம் நிறைந்த ஒரு பிராந்தியமாகும். 'இலங்கையின் நெற்களஞ்சியம்' என்ற பெருமையும் இப்பிரதேசத்திற்கு உண்டு. நீர் வளமும், நிலவளமும் நிரம்பித் திகழும் 'நெல் நாடு' இது. இத்தகைய பல சிறப்புகளும் வாய்க்கப் பெற்ற மட்டக்களப்பில் வன வளமும் நிறைவாகவே உண்டு எனலாம். பற்றைக் காடுகள், முட் காடுகள், நிலையாக நீண்டு காணப்படும் வளர் காடுகள், அயன மண்டலப் பருவக்காற்றுக் காடுகள் என்பன போன்றவையும் காட்டு வளத்தை வளம் படுத்துகின்றன. நம் நாட்டின் வன வளத்தை உதாசீனஞ் செய்துள்ள நாம் சீரழிவு நிலைக்கும், வரட்சி நிலைக்கும் தள்ளப்படுகின்றமையும் தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகிறது. மரங்களையும் பற்றைக் காடுகளையும் தங்குதடையின்றி வெட்டி எடுப்பதும், வீணாக்குவதும் இதற்கான காரணிகளாகக் கொள்ள முடிகிறது. இதன் மூலம் காலநிலைகளில் பாதிப்புகளும், உயிரங்கிகளுக்குப் பலவிதமான நோய்களும் ஏற்பட வழியமைத்துக் கொடுப்பதாகவும் அமைகிறது. நீர் வள மீனவும் நோய்வாய்ப்பேற்பட வழியாய் இருக்கிறது. இதற்கும் கடும் வரட்சியான நிலையே காரணமாகும். மரங்கள் மனிதருக்கென நிழல் தருகிறது. ஆனால் மனிதரோ அவைகளை வேரோடு வெட்டி அழிப்பதும் எரியூட்டுவதும் சாத்தியமானதாகுமா? வன வளம் சீர்குலைவு ஏற்படுகின்றமையால் மண்ணரிப்பு ஏற்படவும் செய்கிறது. அத்துடன் மழைவீழ்ச்சி குறைவுபடவும் காரணமாகிறது. இவைகள் அனைத்தையும் நாம் மனதிற் கொண்டே இயற்கையின் மட்டில் நாம் செயற்பட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பாலோர் (80 ச.வீ) விறகுகளை எரிபொருளாகப் பயன்படுத்துகின்றனர். இப்பிரதேசத்திற் காணப்படும் பாடசாலைகள், வீடுகள், நிறுவனங்கள் போன்றவற்றிற்குத் தேவையான தளபாடங்கள் யாவும் இங்குள்ள காடுகளிலுள்ள மரங்கள் மூலமே பெற்றுக் கொள்ளபடுகிறது. இது இவ்வாறிருக்க வன வளத்தை வளமாக்குவது எப்படி? வளம் மிக்க இப்பிரதேசத்தை வரட்சி மிக்கதொரு பிரதேசமாக மாற்றுவது எங்ஙனம்? என்பதையிட்டும் நாம் சற்றுச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். வன வளம் சீரழிக்கப்படுவதால், மனித குலம் மட்டுமல்லாது, வன வளத்தையும், குளிர்ச்சியினையும், நிழலினையும் எதிர்பார்த்து வாழ்கின்ற விலங்குகளும், புற்பூண்டுகளும் பாதிக்கபடுகின்றன அல்லவா? அதுமட்டுமல்லாமல் இயற்கை அன்னையினது எழிலும், கவர்ச்சியும் குன்றி அதன் நிலைப்பாடுகள் பாதிக்கப்படுவதும் கண்கூடு.

மட்டக்களப்பு "தேசகம்" எனும் பெயர் கொண்டும் வழங்கப் படுவதுண்டு. இதனையே "தேனுண்டு, பாலுண்டு, தெவிட்டாத நெய் உண்டு" எனப் பாடி வைத்துள்ளனர். வனம் எனும் வளம் பாதிக்கப்பட்டால் அல்லது அழிவுக்குட்படுத்தப்பட்டால் இப்பூமித் தாய் என்பவள் கண்ணீர் சிந்துவது தவிர்க்க முடியாத ஒன்றாகி விடும்.

ஆகவே இன்று கண்ணீர் சிந்துகின்ற இப்பூமியில் தேன் சிந்த வைப்பது நம் ஒவ்வொருவரினது கடமையுமாகும்.

பே.சாயி விதிஉஷா,
சிசிலியா பெண்கள் ம.வி.

---

தற்போது உலக சனத்தொகையை நிமிடத்திற்கு ஒரு தடவை கணக்கிட்டுக் கொள்ள முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா? இம்முறையானது "சனத்தொகைக் கணனி அட்டை" (Population Card) எனப்படுகிறது. இதன்படி, சென்ற மாசி 13 சனிக்கிழமை காலை 8.05 க்கு

உலக சனத்தொகை- 5536059005

இலங்கையின் சனத்தொகை- 17776346

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சுடர்

## ஓ! மானிடரே....

மானிடா,
உன் பாலைவன
மேட்டினை
சோலைவனமாக்கும்
நிழல் தரு விருட்சத்தை
வெட்டாமல்
நட்டால்
கறைகள் படிந்த
சுவாசமும்
சுத்தமாகிடும்,
நரகமாகிடும்
உன்னுடல்கூட
சீக்கிரமே
சிகரமாகுமே,

கோடையிலும்
ஓடையில்
வாடை வீச
நீ விடுவதால்
உன் இரத்தத்தை
மட்டுமல்ல உன்
உயிரையும் கூட
நுளம்புகள்
உறிஞ்சிக் கொல்லும்,

வலிக்கு வழியில்லை
என்றோ அதன்
தொண்டையினுள்
புகை போக்கியைத்
திணித்து
காபன் துகள்களை
உணவாக
உன்னைக் கொடுக்கிறாய்?
அது மீண்டும்
உனது நுரையீரலையே
உண்ணுவதும்
உனக்குத் தெரியாதோ?

ஓ! மானிடரே
விரைவில்
வீறு நடையுடன்
உன் உயிரைக்
காக்கும்
சுற்றுப் புறச் சூழலைப்
பேணப் புறப்படுவாய்!

எஸ்.மகேந்திரன்,
செங்கலடி.

## சூழல் எனும் சந்திரனுக்கு,

ஆகாய வீதியிலே
விண்வெளியும் செய்மதியும்
தாமாக இயங்கிக் கொண்டு
உலகத்தை அழிக்கிறது!

ஈர்ப்புக் கொண்ட ஆயுதத்தால்
விண்ணில் செல்லும் விண்வெளியை
தாமாகத் தாக்குகிறதாம்
சுற்றாடல் அழிவுக்கே!

ஆகாய விண்வெளியும்
அலங்காரச் செய்மதியும்
நாளைய உலகுதன்னில்
எப்படித்தான் இயங்கிடுமோ?

விண்ணிலும் இயந்திரமாம்,
மண்ணிலும் இயந்திரமாம்
கடலிலும் இயந்திரமாம்
கட்டிடத்திலும் இயந்திரமாம்!

இத்தகைய இயந்திரம்தான்
நாளைய உலகுதனில்
மானிட வாழ்க்கைதனை
அழித்து விடுகிறது!

நச்சுப் புகை கக்கும் ஆயுதமாம்
நச்சு அனல் கக்கும் இயந்திரமாம்
மனித இன வர்க்கத்திற்கு
அழிவுகளையே ஈட்டித் தந்திடுமே!

பி.உமாச்சந்திரன்,
சிவானந்தா ம.வி.

## சூழலைப் பேணிடுவோம்

குப்பைகூழத்தைக் குவித்து வைத்து
கூட்டுரமாய் ஆக்கிடுவோம்
குவியும் சூழல் கழிவுகளால்
கூடிடும் நோய்தனைப் போக்கிடுவோம்!

வீட்டினைச் சுற்றி மரம் வளர்ப்போம்
அதன் பயனை நாமும் பெற்றிடுவோம்
காட்டை வெட்டி அழிக்காமல்
நாட்டின் வளத்தைப் பேணிடுவோம்!

இயற்கையன்னையின் அருட்கொடையாம்
நீர் நிறை வாவி குளமும் நதியும்
இலையும் குழையும் கழிவும் சேர்ந்து
நீங்கா மாசடைவதைத் தடுத்திடுவோம்!

க.குமாரசூரியம்,
களுவன்கேணி வி.வி.

## வெளியீட்டுக் குழு

சுடரின் தூண்டுகோல் :-
மனோ இராஜசிங்கம்
ஜோ.இ.கிறிஸ்தோபர் } மன்று

ஆசிரியர் குழு :-

| | | |
|---|---|---|
| எஸ்.டி.முரளிதரன் | – | சித்தாண்டி இ.க. |
| எஸ்.பேரானந்தம் | – | சிவானந்தா ம.வி. |
| கே.ஜெயக்குமார் | – | களுதாவளை ம.வி. |
| எஸ்.சிவரூபன் | – | இந்துக் கல்லூரி |
| வி.கலைச்செல்வி | – | தாளங்குடா வி.வி. |
| வி.முரளிதரன் | – | செங்கலடி ம.வி. |
| ரி.மதிவதனி | – | வந்தாறுமூலை மே.கி.அ.ச. |
| பே.சாயிவிதுஉஷா | – | சிசிலியா ம.வி. |

## வாசகர் விமர்சனம்

* திரு.சி.புண்ணியமூர்த்தி,
பிரா.உ.உ.ஆணையாளர்.

மட்டக்களப்பு மாவட்ட சூழல் விழிப்புணர்விற்காகத் தாங்கள் எடுத்துள்ள முயற்சியினையிட்டு பாராட்டுக்கள். "சூழல் சுடர்" மேலும் பல நல்ல ஆக்கங்களுடன் வெளிவர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

* திருமதி.ரி.ஜெயராஜா,
சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்.

பாராட்டுக்கள். முன் சித்திரம் ஆழமான கருத்தினைப் பிரதிபலித்தது. செய்தி மஞ்சரியின் அம்சங்கள் வரவேற்கத் தக்கவை. ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டிருந்த செய்திகளில் பல இதுவரையும் கேள்வியுறாதனவாகவும் இருந்தன.

* பொது நூலகப் பொறுப்பாளர்,
காத்தான்குடி.

"சூழல் சுடர்" சஞ்சிகையைப் பெற்றுக் கொண்டேன். மிக்க மகிழ்ச்சியும், நன்றிகளும். எமது பிரதேச மக்களும் சூழல் பாதுகாப்பில் பங்கு பெற உதவி நல்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

**மரங்களை**
**நடுங்கள்,**
**மண்ணைப்**
**பொன்னாக்கு**
**ங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய பாடம்

மட்டக்களப்பின் தாவரச்சாகியம் :-

மட்டக்களப்பு மாவட்டம் உலர் வலயத்தினுள் அடக்கப்பட்டுள்ளதால் அக்கால நிலைக்கேற்ப தாவர சாகியமும் அமைகிறது.

மட்டக்களப்பு கீழ்க்கரையோரமாக உள்ளதால் கடல் கடல் சார்ந்த தாவரங்களின் ஆதிக்கமும் பெரும் பங்கினை வகிக்கின்றன. இக்கரையோரமானது வெருகல்-துறைநீலாவணை வரை ஏறத்தாழ 105 கி.மீ. நீளம் பரந்ததாகக் காணப்படுகிறது.

இப்பரந்த கடற் பகுதியினுள் பல்வகையான தாவரங்களினைந்து ஒரு சாகியத்தை ஆக்குகிறது. இது :-

1. கடலுக்குரிய தாவர வர்க்கம் எனப்படுகிறது. காணப்படும் தாவரங்கள் - அல்கா வகைகள், கடற்புற்கள் எனப்படும் சாதாளை போன்றவை.

2. கடல் சார்ந்த தாவர வர்க்கம் :- இம்மாவட்டத்தில் 3 களப்புகள் உள்ளதால் இத்தகைய தாவர வர்க்கம் செழிப்பாக இப்பிரதேசத்தில் காணப்படுகிறது.

களப்புகள் :-

(1) வாகரை வாவி

(2) வாழைச்சேனை வாவி

(3) மட்டக்களப்பு வாவி

இம்மாவட்டத்தின் காலநிலை மாற்றங்களின் போது கடல் வற்றுப் பெருக்கு காரணமாக மேற்படியுள்ள களப்புகளை அண்டிய பகுதிகளில் கடல் நீர் தேங்கிப் பின் ஆவியாவதால் இப்பகுதிகளில் உப்புச் செறிவு அதிகமாகிறது. எனவே அப்பகுதிகளுக்கே உரித்தாகும் பின்வரும் தாவர வர்க்கங்கள் காணப்படுகிறது.

(அ) உவர்சேற்றுத் தாவர வர்க்கம் :-

இத்தாவரங்கள் உவர் வலயத்திற்குரிய இயைபாக்கங்களைக் கொண்டவையாக உள்ளன. இங்கு சில அல்காக்களும், முறையே சலிக்கோனியா, கலோபில்லம், ஆத்திரோஜியம், சுவேடா போன்றவைகளும் காணப்படுகின்றன.

(ஆ) கண்டல் தாவர வர்க்கம் :-

இவ்வர்க்கம் மேற்கூறிய களப்புகளினது ஓரங்களில் காணப்படுவதாகும். குறிப்பாகத் தன்னாமுனை - முகத்துவாரம், வலைகட்டிறவு போன்ற வரையான ஏரியோரங்களில் மட்டக்(களப்பு)க்கு எழிலை ஊட்டுகின்றன. இங்கு அதிசயத்திற்குரிய பல தாவர வர்க்கங்கள் காணப்படுவது சூழலியல் கற்போரின் கவனத்தை கவனத்தை ஈர்க்கிறது. இத்தாவரச் சாகியம் அவிசென்னியா, இலும்னிற்செரா, இறைபோபோரா, சொனரேற்றியா, புறுகிரா போன்றவைகளால் ஆதிக்கம் பெற்று உள்ளதைக் காணலாம்.

(இ) நெய்தனிலத் தாவர வர்க்கம் :-

மண் அடைதல் நடைபெறும் மணற்பிட்டிகளைக் கொண்ட கடற்கரையோரங்களில் இவ்வகையான தாவர வர்க்கம் தோன்றுகின்றது. மட்டக்களப்புக் கடற்கரையோரங்களிலும் இத்தகைய தாவர வர்க்கங்கள் காணப்படுகின்றன. கடற்கரையிலிருந்து உள்நாடு நோக்கிச் செல்லும்போது வெவ்வேறு வகையான வலையங்களாகத் தாவரங்கள் உருவாகியுள்ளதைத் தெளிவாகக் காணலாம். முறையே இல்பெனிபெக், ஐப்போமியா லோவியா, கவனெல்லியா, இறிமேரா மறிற்றிமா, என்பனவும் வேனோனியா, கலோத்திரப்ஸ், இவியுக்கஸ் போன்றவையும், தேர்மினேலியா, பாங்ரோனியா, பந்தலை போன்றனவும் வலயங்களுக்கு வலையம் காணப்படுகிறது.

3. இங்கு நீர் வளத்திற்குக் குறைவில்லை என்னுமளவிற்கு நன்னீர் ஆறுகள், குளங்கள், குட்டைகள் காணப்படுகின்றன. குறிப்பாக உன்னிச்சை, றூகம், வாகனேரிக் குளம் ஆதியன இப்பகுதியிற் பயிர்ச்செய்கைக்குத் துணை நிற்கின்றன. இவ்வாறான இடங்களிலேயே இவற்றுக்குரித்தான நன்னீர்த்தாவரச் சாகியம் தோன்றுகின்றன. இது :-

(1) நிலையான நன்னீர்த்தாவரங்கள்

(2) ஓடும் நன்னீர்த்தாவரங்கள்

என இருவகைப்படும்.

மட்டக்களப்பைப் பொறுத்தவரையிலும் நிலையான நன்னீர் நிலைகள் குளங்குட்டைகளாகவே அமைந்துள்ளது. எனவே பொதுவாக கீழ்வரும் தாவர வர்க்கங்களாலேயே மேற்படித் தாவரச் சாகியங்கள் ஆக்கப்படுகின்றன. பிளாந்தன் வகை, இலெம்னா, சுவினியா, ஐக்கோனியா, பிஸ்றியா போன்றனவும், அழகு படுத்தும் தாவரங்களாக நிம்பியா(அல்லி) நெலும்பியம்(தாமரை) போன்றனவும் காணப்படுகின்றன. ஓடும் நீர்நிலைகளில் மேற்படித் தாவரங்கள் குறிப்பிடுமளவிற்கும் குறைவு எனலாம். எனவே கற்பாறைகளில் ஒட்டி வாழக்கூடிய முசுக்கித் தாவரங்களும், பொடஸ்ரோமேசியா குடும்பத் தாவரங்களும் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி.....7

## சூழல் பாதுகாப்பு

இன்று உலகில் அதிகரித்து வரும் சனத்தொகைக்கு ஏற்ப அதன் தேவைகளும் அதிகரித்துக் கொண்டே போகிறது. எனவே இவற்றுக்காக உலகின் தேசியச் செல்வங்களான தாவரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் முக்கியமாக மழைவீழ்ச்சி குறைவடைந்து வருகிறது. இதன் காரணமாக உலகில் வாழும் மக்களுக்குப் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட வழியமைத்துக் கொள்ளுகிறது. தற்போது ஏற்பட்டுள்ள இந்நிலை தொடருமானால் 2000ம் ஆண்டளவில் சூழலின் ஸ்திரத் தன்மை குறைந்து விடுகின்ற சாத்தியம் உள்ளதெனவும், மக்கள் தற்போதுள்ள நிலையிலும் பார்க்க பல வழிகளிலும் ஏழ்மை நிலை அடையக் கூடுமெனவும் அமெரிக்க அரசாங்கத்தினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சூழல் பாதிப்படையும் போது உலகில் வாழும் அனைத்துப் பயிரினங்களும் பாதிப்படைவதை நாம் அறிவோம். சூழலைப் பாதுகாத்தல் என்பது ஒரு தனி மனிதனாலோ அல்லது ஒரு நாட்டினதலோ ஆற்றக்கூடிய கருமம் இல்லை. உலகில் வாழுகின்ற ஒவ்வொருவரும் தமது எதிர்காலச் சந்ததிக்காகவும், தாம் சுபீட்சமாக வாழ்வதற்காகவும் இயற்கையைப் பாதுகாத்தல் என்பது தலையாய கடமையாகும். எமது நாட்டிலும் சூழலைப் பாதுகாப்பதற்கு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இயற்கை வளங்கள் அழிவு படும் நிலை இல்லாமற்போக 'சூழல் பாதுகாப்புச் சட்டம்' ஆரம்பிக்கப்பட்டு மரங்களை வெட்டுவதும், காடுகளை எரிப்பதும் தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டுள்ளது. 'சூழல் பாதுகாப்பு அமைப்பு' ஏற்படுத்தப்பட்டு ,எமது நாட்டு மக்களையும், மாணவர்களையும் மரங்கள் நடுவதற்கு ஊக்குவித்து வருகிறது.

தாவர விலங்குக் கழிவுப் பொருளை ஒன்று சேர்த்துக் கூட்டெரு தயாரிப்பதன் மூலம் நச்சு வாயுக்களினது அபாயத்தையும், நோய்களின் எதிர்ப்புச்சக்தியினதும் காரணங்களாக அமையக் கூடும். நாட்டினது அபிவிருத்தி முயற்சிகள் என்பதையிட்டும் காடுகள் அழிவுக்குட்படுத்தப்படுகிறது. அவற்றை ஈடு செய்யும்பொருட்டு பயன்தரு மரங்களை நடுதல் அவசியமானதாகும். இதன் மூலம் நமக்குத் தேவையான பழங்கள், விலங்குகளுக்கான உணவு, விறகு போன்றன கிடைக்கவும் வாய்ப்பாகிறது. அத்துடன் நாட்டு வளத்தைப் பேணவும், மழைவீழ்ச்சியைப் பெற்றுப் பயன்பெறவும், குளிர்ச்சியை ஏற்படுத்தவும் பெருமரங்கள் பயனாய் அமைகின்றன.

மூடு பயிர் வளர்ப்பதன் மூலம் மண்ணரிப்பைக் கட்டுபடுத்தல், மண்வளத்தைப் பேணுதல், நீரிழப்புக் குறைக்கப்படுதல் போன்ற பல்வேறு நன்மைகள் கிடைக்கப் பெறுகின்றன.

அணைக்கட்டுக்கள் மூலம் மழை நீர் கடலை அடையா வண்ணம் பாதுகாக்கப்பட்டு குடிநீராகவும், விவசாய முயற்சிகளுக்கேற்ற நன்னீராகவும் பயன்படுத்தப்படுகிறது. சில தாவர இனங்கள் சூழலை மாசுபடுத்தக் கூடிய தொற்று நோய்க் கிருமிகளைக் கூட அழிக்கக் கூடிய வல்லமையுடையதாகக் காணப்படுகிறது.

எனவே நாமும் சூழலை மாசுபடுத்தக் கூடிய வழிவகைகளைக் கட்டுப்படுத்தி, சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பாடசாலைகளிலும் கிராமங்களிலும் மரங்கள் பலவற்றை நட்டு, சூழலைப் பாதுகாப்பதற்குரிய திட்டமிட்ட விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு எமது சூழலைப் பாதுகாப்போமெனச் சூளுரைப்போம்.

வ.கலைச்செல்வி,
தாளங்குடா ஸ்ரீ வி.வி.

---

## சூழல் பாதுகாப்பில் மாணவரின் பங்கு

சூழல் என்பது நாம் வசிக்கும் சுற்றாடலையே குறித்து நிற்கிறது. எனவே நாம் சீவிக்கும் இச்சுற்றாடல் சூழ்நிலையானது எந்நாளும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருக்க வேண்டியது அவசியம். எனவே இன்று உள்ள காலகட்டத்தில் மாணவர்களாகிய நாமும் சூழல் பாதுகாப்பிலிற்குக் கைகொடுத்தல் வேண்டும்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதற்கிணங்க இன்று மாணவர்களாகிய நாமும் ஒன்று சேர்ந்து சூழலிலேயே காணப்படும் கழிவுப் பொருட்களைக் கொண்டே கூட்டு எரு தயாரிப்பதில் ஈடுபடல் வேண்டும். மற்றும் வீதி எங்கும் தப்பரவு செய்தல், மரங்களை நடுதல், வீடுகள் தோறும் சென்று மரநடுகை பற்றி அறிவுறுத்துதல் போன்ற நற்காரியங்களில் ஈடபடல் வெற்றியைப் பெற்றுக் கொள்ளும் உகந்த வழிமுறையாகும்.

இன்று சமுதாயத்தின் முதுகெலும்பாக விளங்குபவர்கள் மாணவர்களே. இன்றைய மாணவர் சமூகமே நாளைய தேசத்தின் காவலர்கள். எனவே இவர்களின் செயற்பாடானது தன்நாட்டினதும், மக்களினதும் நலன்களைக் கருத்திற் கொண்டதாகவே இருத்தல் வேண்டும். இது இன்றுடன் மட்டுமல்லாது காலம் முழுவதும் தொடர வேண்டும்.

ஆகவே மாணவர்களாகிய நாமும் நமது சமூகத்தினது நல்வாழ்க்கையை மனதிற் கொண்டு செயற்படுவோம் எனக் கூறுவதோடு மட்டுமல்லாது, அதனைச் செயற்படுத்திக் காட்டுதல் வேண்டும்.

பூ.முகாயநாதன்,
கனுதாவளை ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழலைப் பேணுதல்

மக்கள் யாவரும் இன்பமான வாழ்வையே விரும்புகின்றனர். இன்பமான வாழ்விற்கு உள்ளம், உடல் எனும் இரண்டும் நலமாகவிருத்தல் அவசியம். உளம் நலமாக இருப்பதற்கு நல்லெண்ணம், நற்செயல், நல்லோர் இணக்கம் என்பன உதவி புரிகின்றன. உடல் நலமாக இருப்பதற்கு தூ ய காற்று, நிறையுணவு, சுத்தமான உடை, காற்றோட்டமும், வெளிச்சமும் உள்ள வீடு, நற் பழக்கவழக்கம், தூ ய சூழல் என்பன உதவி புரியும்.

ஓங்கி உயர்ந்த பருவதம் : அதை அணைத்து மகிழும் மேகம் : எதற்கும் அஞ்சேன் என்று துள்ளிக் குதிக்கும் அருவி : தன் ஒளிக் கதிர்களுடன் வான வீதியில் உலா வரும் அருணன் : இராக்காலத்தில் தன்னொளி பரப்பும் வெண்ணிலவு : அலைக் குழந்தைகளுடன் சிரித்து விளையாடும் கடலன்னை இவையனைத்தும் இறைவன் என்னும் மாபெரும் சக்தியால் உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளின் நன்மையின் பொருட்டு படைக்கப்பட்டுள்ளன. எல்லோருக்கும் சொந்தம் உள்ளது. இவற்றை அழிப்பதற்கோ, சொந்தம் கொண்டாடுவதற்கோ சிற்றறிவு படைத்த மனித சமுதாயத்திற்கு அருகதை கிடையாது. ஆனால் இன்று அவன் இயற்கை அன்னையைச் சீண்டி வேடிக்கை பார்க்கிறான். அதனாலேயேதான் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் சூழலைப் பேணல் அவசியமாகும்.

கடலின் ஆழத்தை அளந்த மனிதன், விண்வெளியையும் ஆராயப் புறப்பட்டுவிட்ட யுகம் இது. இறைவனால் சிந்திக்கும் ஆற்றல் எனும் அருங்கொடை மூலம் ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன் தனக்கு இயற்கை அன்னை அளித்த கொடைகளை உதாசீனப் படுத்தித் தனக்குத் தானே அழிவைத் தேடிக் கொள்ளுகிறான்.

பூமியின் இயற்கை சூழலை நாம் மாற்ற முயன்று வருகிறோம். வலிமையான மனித இனம் தொழில்நுட்பவியலின் துணையுடன் பூமியில் ஏனைய உயிரினங்கள் யாவற்றையும் ஆக்கிரமித்துள்ளன.

நாம் இயற்கையின் சமநிலையைத் தளைத்து ஏராளமான விலங்குகளை வேட்டையாடி அழித்து வருகிறோம். காடுகளையும் அழிவுக்குட்படுத்துகிறோம். அதனால் இயற்கையின் தாவர விலங்கின உணவுச் சங்கிலித் தொடர்பையும் மாறுபட வைக்கின்றோம். இந்த அழிவினை நாம் தடுக்க வேண்டும். இயற்கைச் சூழலைப் பாதுகாக்க வேண்டும். இதற்கு முதல் வழி மீள வனமாக்கல் ஆகும். புகலரங்களில் விலங்குகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

தொழிற்சாலைகள் புதிதாகத் தோன்றுவதைக் கட்டுப்படுத்தல் வேண்டும். வளி அசுத்தமடையாது தடுப்பதற்கு விஞ்ஞானிகள் வழி காண வேண்டும். தொழிற்சாலை அசுத்தங்களை நதிகளின் வழியே விடாது, செயற்கை உரங்களையும், கிருமிநாசினிகளையும் திட்டமிடல் முறையில் பயன்படுத்தல் வேண்டும். நிலத்தினடியிலிருந்து எடுக்கப்படும் கனிப்பொருட்களை அளவுகணக்கின்றி கொள்ளையிட்டு அழிவுக்குட்படுத்தக் கூடாது. மனிதனின் செயலாலே மனிதன் அழிவுக்கு இடங்கொடுக்கக் கூடாது. சூழல் மாசடைதல் தற்கால மக்களையும், வருங்காலச் சந்ததியினரையும் பாதிக்கக் கூடிய பேராபத்தினையுடையது. வளங்களைச் சிக்கனமாக பயன்படுத்துவதன் மூலம் சூழலைப் பேணலாம்.

மனிதனுக்கும், இயற்கைச் சூழலுக்கும் ஏற்பட்ட தலையீடுகளை ஆராயும்போது நாம் அன்மைக் காலத்திலே பாரசீக வளைகுடா யுத்தத்தை மறந்து விடல் கூடாது. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்பன ஒருவனின் அல்லது ஒரு சாம்ராஜ்ஜியத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருக்கும் என்று பெரியோர் கூறுவர். ஆசைகளின் நிமித்தம் தோன்றுகின்ற யுத்தங்களின் மூலமும் சூழல் மாசடைகிறது. எனவே அளவோடு ஆசைகளை வைத்தும் சூழலைப் பேணலாம்.

எனவே மனிதன் சுயநல நோக்கோடு அல்லாமல் எதிர்கால சந்ததியினர் பற்றியும் சிந்தித்து, இயற்கை அன்னையின் எழில் குன்றி விடாது பாதுகாத்து, அழகு படுத்திப் பார்த்தல் மேன்மையானதொரு கருமமாகும் என்பதில் ஐயமில்லை.

செ. ராஜமலர்,
செங்கலடி ம. வி.

---

## வீட்டுத்தோட்டப் போட்டி-
## 1992/1993
## பிரதேச செயலகம்-மன்முனை வடக்கு

மன்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வீட்டுத்தோட்டச் செய்கையாளர்களை ஊக்குவிக்குமுகமாக வீட்டுத் தோட்டப் போட்டி பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்டது. இதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கி, மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டது. இப்போட்டியில் 232 பேர் கலந்து கொண்டனர்.

கொடுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப பயிர்ச்செய்கையில் இடம்பெற வேண்டிய பயிர்களாவன :-

1. இலைக்கறிப் பயிர்கள் :- உயிர்ச்சத்துக்களையும், கனியுப்புக்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
2. கிழங்குப் பயிர்கள் :- சக்தியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய உணவு.
3. அவரைப் பயிர்கள் :- புரத உணவைப் பெற்றுக்கொள்ள முடியும்.
4. மரக்கறிப் பயிர்கள், பழப் பயிர்கள், தென்னை, வாசனைப் பயிர்கள்.

இவ்வடிப்படையில் தமது தோட்டத்திலிருந்து தம் தமக்குத் தேவையான சமநிலையுணவினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாய் அமைந்த வீடும்.

தொடர்ச்சி..... 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தாவரங்களும் ஊன் உண்ணும்

சதுப்பு நிலங்களில் வாழும் சில தாவரங்கள் வேர் மூலம் தமக்குத் தேவையான மூலகங்களையும், அமினோவமிலங்களையும் பெற்றுக் கொள்ள முடியாது. ஆகவேதான் இத் தாவரங்கள் பூச்சிகளையும், சிறிய விலங்குகளையும் சிறை பிடித்து அவற்றிலிருந்து தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்ளுகின்றன. அவ்வகையான தாவரங்களுள் சில பின்வருமாறு :-

1. நெப்பந்திசு :-

இத்தாவரத்தின் இலை நுனியானது கெண்டியாகத் திரிபடைந்துள்ளது.

மாதிரிப்படம் :-





கெண்டியின் கவர்ச்சியான மூடியினால் கவரப்படும் பூச்சிகள் கெண்டியினது நுனியிலுள்ள அமுதத்தைப் பருக எத்தனிக்கும்போது அதன் உட்புறமுள்ள வழுக்கும் தன்மையுள்ள பகுதியில் வழுக்கி அடியில் உள்ள சமிபாட்டு நொதியங்களைக் கொண்ட திரவத்துள் விழுகிறது. இத் திரவத்தினுள் விழும் பூச்சிகள் மேல் நோக்கி ஏற முடியாது கீழ்நோக்கி அமைந்த மயிர்கள் தடுக்கின்றமையால் ஓரிரு நாட்களுள் பூச்சி இறந்து விடுகிறது. பின் அது சமிபாட்டு நொதியத்தால் சமிபாடடையப் பெற்று தேவையான பதார்த்தங்கள் அகத்துறிஞ்சப் பட்டுவிடும்.

2. யூற்றிக் குலேரியா :-

இது நீரில் மிதந்து செல்லும் ஒரு நீர் பூண்டாகும்.


மாதிரிப்படம் :-




வெட்டப்பட்ட சிறிய இலைப்பரப்புகளில் சவ்வுப் பைகளாகத் திரிபடைந்து காணப்படும். சவ்வுப் பையின் திறந்த நுனியானது ஒரு வால்வினால் மூடப்பட்டு இருக்கும். இந்நுனியில் உணர்ச்சிக்குரிய சிலிர் முட்கள் காணப்படும். இந்த சிலிர் முட்களில் சிறிய பூச்சிகள் படும்போது வால்வு உட்பக்கமாகத் திறக்கும். அப்போது பூச்சியானது நீருடன் சேர்ந்து சவ்வுப்பையுள் இழுக்கப்படுகிறது. பின் வால்வு மூடிக்கொள்ளுகிறது. சிறைப் பிடிக்கப்பட்ட பூச்சியானது இறந்த பின்னர் சவ்வுப் பையின் உட்புற மேற்பரப்பிலுள்ள சமிபாட்டுச் சுரப்பியினால் சுரக்கப்படும் நொதியத்தின் மூலம் சமிபாடடையச் செய்து அகத்துறிஞ்சப்படும்.

3. டுரோசிரா :-

மாதிரிப்படம் :-




கரண்டி உருவான தட்டையான அமைப்புக்கொண்ட இதன் இலைகளில் உணர்கொம்புகள் காணப்படும். இவ்வுணர்கொம்புகளின் நுனியில் சமிபாட்டு நொதியங்களைச் சுரக்கும் சுரப்பிகள் காணப்படும். இச் சுரப்புகளால் சுரக்கப்படும் நொதியம் சூரிய ஒளியில் பனித்துளி போன்று காட்சியளிக்கும். இதை அமுதமென்று நினைத்து பூச்சிகள் அமரும்போது அதில் ஒட்டிக்கொள்ளுகின்றன. உடனே உணர் கொம்புகள் உட்பக்கமாக வளைந்து பூச்சியைச் சிறைப்பிடிக்கின்றன. பின் சமிபாட்டு நொதியத்தினால் இறந்த பூச்சியின் உடல் சமிபாடடையச் செய்து அகத்துறிஞ்சப்படும்.

தொகுப்பு - க. சத்தியானந்தன்,
சித்தாண்டி இ.க.

---

வீட்டுத்..... 5ம் பக். தொடர்ச்சி.....

இதிற் பயிற்சி பெற்றோருக்கான பயிற்சி வகுப்புகளில் புதிய தொழிநுட்பம், பயிர்ப் பாதுகாப்பு, பராமரிப்பு போன்ற விடயங்களில் அவர்கள் பூரண அறிவைப் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பாய் அமையப் பெற்றது.

வீட்டுத்தோட்டப் போட்டியில் பங்குபற்றி பரிசு பெறுவோர் விபரம் :-

1ம் பரிசு - பொ. ஜெகநாதன், புளியந்தீவு.
2ம் பரிசு - ரி. இராஜேந்திரம், சத்துருக்கொண்டான்
3ம் பரிசு - எஸ். தேவதாஸ், நாவற்குடா கொலனி.

ஆறுதல் பரிசு பெறுவோர்

1. கே. தியாகராஜா, சத்துருக்கொண்டான்.
2. ரி. கிருபைரெட்ணம், சத்துருக்கொண்டான்.
3. ஏ. ஏகாம்பரம், சத்துருக்கொண்டான்.
4. கே. பொன்னுத்துரை, பெரியதுறை.
5. எஸ். சதீஸ்குமார், பெரியதுறை.
6. ரி. சிறிபாலன், புதுநகர்.
7. கே. கலாமோகன், புதுநகர்.
8. எஸ். அன்னம்மா, பார் வீதி.
9. எஸ். சிவலிங்கம், பார் வீதி.
10. ஆர். இரத்தினசிங்கம், நொச்சிமுனை.

அ. சுதா,
விவசாயப் போதனாசிரியை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்பட்டதே பூமி

ராஜ் செங்கப்பா

எட்கர் மிட்செல் 1971-ல் அப்பல்லோ-14 விண்கலத்தில் சந்திரனை வந்திறங்கிப் பறந்தபோது விண்வெளியிலிருந்து பூமியைப் பார்த்தார். முதல் தரிசனம் அவரை அப்படியே பரவசத்திற்குள்ளாக்கியது. "நீலக்கல் பதித்த வெள்ளிப் பதக்கமாய் ஜொலித்தது. அதை மெதுவாக சுழன்று வரும் மென்மையான வெண்பட்டு போர்த்தியிருக்கிறது... ஆழ்ந்த மர்மம் சூழ் கொண்டிருக்கும் கருங்கடலில் சிறிய முத்து போல..." அவர் ஹூஸ்டன் தலைநிலையத்திற்கு புளகாங்கிதமாக செய்தி அனுப்பினார்.

இன்று மிட்செல் காமிராவை எடுத்து பூமியைச் சுற்றியிருக்கும் காடுகளின் காட்சிகளைப் படம்பிடித்து அவற்றை 71-ல் தான் எடுத்த படங்களோடு ஒப்பிட்டால், காடு காணாமற்போயிருக்கும்; நிலப்பரப்பைப் பார்த்து அதிர்ச்சி கொள்வார். பூமியிலிருக்கும் நீர்ப்பரப்பின் காடுகளை ஆராய உதவும் ஸ்பெஷல் டெலஸ்கோப்பை எடுத்துப் பார்த்தாரென்றால் நீர்ப்பரப்பின் குறுக்கும் நெடுக்குமாக நெளியும் விஷப் பட்டைகளையும், கடல் ஆழங்களில் பந்து பந்தாக மிதக்கும் பெட்ரோலியக் கசடுகளையும் பார்ப்பார். "ஹே மை காட்!" என்று வாஷிங்டனின் தலைநிலையத்தை அழைத்து "பூமியை என்ன கதிக்குள்ளாக்கி வைத்திருக்கிறோம்!" என்று அலறியிருப்பார்.

பூமியில் நாம் பண்ணியிருக்கும் அந்தர்வ கோலத்தைக் காண விண்வெளிக்குள் 36,000 கிலோ மீட்டர்கள் பறந்து செல்ல வேண்டியதில்லை. இன்றைக்கும் நாம் அருந்துவதில், சுவாசிப்பதில், புசிப்பதில், பார்ப்பதில் மாசு நீக்கமற நிறைந்திருக்கிறது. 100 வருடங்களுக்குள்ளாக, அதிலும் கடந்த 30 வருடங்களில், மனிதர்கள் பூமியை பேரழிவின் விளிம்பிற்குக் கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள். கனமான கொதிக்கும் வாயுக்களை அதிக அளவில் வாயுமண்டலத்தில் பரவவிட்டு, வறட்சிக்கும் சீதோஷ்ண மாற்றங்களை உருவாக்கி வருகிறோம்.

இப்போது பூமியின் சுற்றுச்சூழல் அழிவுதான் மனித குலத்திற்கு மிகப் பெரிய ஆபத்து. இந்தப் பேரழிவைத் தடுக்க உலகளாவிய பரிமாணம் கொண்ட ஒரு இயக்கம் தேவைப்படுகிறது. இந்த நிதர்சனம்தான் ஜூன் 3-லிருந்து 14-ம் தேதி வரை பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடக்கும் உச்சி மாநாட்டில் 150 நாடுகளைச் சேர்ந்த தலைவர்களைக் கூட வைத்திருக்கிறது.

இது உலகம் முழுவதற்குமான சரியான எச்சரிக்கை அறைகூவல் என்றாலும் இது போதாது. இந்த உச்சி மாநாட்டிற்கான இரண்டு வருட முன்னேற்பாடுகளின் போது ஒரு விஷயம் புரிந்தது. பிரச்சினைகளை எப்படி தீர்ப்பது என்பது குறித்து வளர்ந்த, வளரும் நாடுகளுக்கிடையே எழுந்த தீவிர பிளவு வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது. இந்த இடைவெளி மிக அதிகம். சுற்றுச்சூழலை முன்னிட்டு நாடுகள் ஆதிக்கக் கூட்டணிகளை அமைக்க ஆரம்பித்தது. முந்தைய பனிப்போர் கூட்டணிகளைப் போலவே இருக்கிறது. சுற்றுப்புறம் திடீரென மிக முக்கிய வெளியுறவுக் கொள்கையாகிவிட்டது.

இப்போது எழுந்திருக்கிற மோதலைப் புரிந்து கொள்ள முடிகிறது. இதற்குத் தீர்வு ஏற்படுவதைப் பொறுத்து தான் ஒவ்வொரு நாட்டிலும் பொருளாதார வளர்ச்சி அமையும். அந்த அளவிற்கு இது முக்கியத்துவம் உள்ளது.

அடுத்த சில வருடங்களில் அதிதீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருக்கலாம். நாடுகள் எரிசக்தி பயன்படுத்தும் முறைகளில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வருவதும் அதன் அம்சமாக இருக்கலாம். நிலக்கரி, பெட்ரோல், மரம் போன்ற நிலத்தடி எரிபொருள்களை எரிப்பது பூமியை நேரடியாகவே உஷ்ணப்படுத்துவதால் நாடுகள் வேறு வழிகளைத் தேடும் நிலைக்குத் தள்ளப்படலாம். அணுசக்தியை பெருமளவில் நாடும் நிலைமைக்கு சந்திக்க வேண்டியிருக்கலாம்.



இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க தேவைப்படும் விதிகளெல்லாம் பணக்கார—ஏழை நாடுகளின் ஒரு அசாதாரண கூட்டு முயற்சி. பணக்கார நாடுகள் தாங்கள் ஏராளமாக அனுபவிப்பது பற்றி உள்முகச் சிந்தனை செய்ய வேண்டியிருக்கிறது. சில நிதி உதவிகளுடன் ஏழை நாடுகள் தங்களின் எரிசக்தித் திறன் அளவுகளை அடியோடு மாற்ற வேண்டும். மக்கள் தொகை பெருக்கத்தைக் குறைக்க தீவிர முயற்சி எடுக்க வேண்டும். மண் அரிப்பைத் தடுக்கவும், வற்றாத நீர் ஆதாரங்களைப் பாதுகாக்கவும் எளிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். ஏழை—பணக்கார நாடுகள் ஆக்கபூர்வமான முறையில் இணைந்து செயல்பட வேண்டும். ஏழை நாடுகள் ஸ்திரமான உயர் வளர்ச்சி நிலைமையைப் பெற இந்தக் கூட்டின் மூலம் தொழில்நுட்பமும், நிதி உதவியும் கைகொடுக்க வேண்டும்.

இவையெல்லாம் தாமதமின்றி செய்யப்பட வேண்டும். ஆபத்து நம் குழந்தைகளின் எதிர்காலத்திற்கில்லை. இப்போதே. இங்கேயே. ■

ஓவியம்: [illegible]

> பூமியைக் காப்பாற்ற எரிசக்தி நுகரும் போக்கை மாற்றுவது, வெளிவிடும் கார்பனுக்கு வரி விதிப்பது தேவை.

ஜூன் 6-20-1992 ♦ இந்தியா டுடே

## இன்றைய பாடம் தொடர்.....

காட்டுத் தாவரச்சாகியம் :-

இத்தாவரச் சாகியம் பெரிய மரங்களையே கொண்டதாக இருக்க வேண்டுமாயினும் இம் மாவட்டத்தின் இருப்பிட வசதிக்காகவும், பயிர்ச்செய்கைக்கு உரிய நிலத்தைப் பெறுவதற்காகவும், விறகுத் தேவைக்காகவும் தற்போது பெரும்பாலும் மரங்கள் அழிக்கப்பட்டு வருகிறது. எனினும் சிறியளவான காட்டுத் தாவர வளம் மட்டக்களப்பின் தெற்கேயும், வடக்கு பகுதியிலும் காணப்படுகிறது. இங்குள்ள மரங்கள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருப்பதும் ஒருவித வரப்பிரசாதமாகும். முதிரை, கருங்காலி, பாலை, வீரை, கல்மில்லா, மில போன்றவை அவற்றுள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இலங்கையிலுள்ள தாவரச் சாகியங்களில் பெரும்பாலாக பல வகைகளை தன்னுள் மட்டக்களப்பின் தாவரச் சாகியம் கொண்டிருக்கிறது. இருந்தும் அவற்றை பாதுகாக்கும் பொறுப்பையும், கரிசனையையும் நாம் கொள்வோமாயின் எமது பிற்காலச் சந்ததியின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வித்திட்டவர்களாய் ஆவோம் எப்பதில் ஐயமில்லை.

"மாதம் ஒரு மரம் நட்டு மாண்புடன் வாழ்ந்திடுவோம்"

எஸ் .டி .முரளிதரன்,
சித்தாண்டி இ. ச.



## கீரை விதையின் மகத்துவம்

கீரை ஓர் மலிவானதும், சத்துள்ளதுமான தாவர உணவுப் பொருளாக மக்களால் பாவிக்கப்படுகிறது. ஆனால் கீரை பூத்ததும் அது தன் பெறுமானத்தை இழந்து விடுகிறது. இது ஒரு பொதுவாக வழங்கும் கருத்தாகும். ஆராய்ச்சியாளர்கள் கீரையின் விதை சுதேச இனத்தவரால் உணவுக்காகப் பல நூற்றாண்டுகளாகப் பாவித்து வரப்படுவதாகக் கண்டு பிடித்துள்ளார்கள். பட்டினிச்சாவினையெதிர் நோக்கும் மக்களுக்கு இது ஓர் வரப்பிரசாதமாக அமையும்.

கீரை விதையை சட்டியிலிட்டுச் சூடு காட்டும்போது சோள விதையைப் போன்று பொரி எழும்பும். பின் இதை அரைத்து மாவாக்கி உணவிற்குப் பாவிக்க முடியும்.

ஆதிகால மக்களால் அமோகமாகப் பயிரிடப்பட்ட பயிர், 500 ஆண்டுகளின் முன் ஸ்பானியரின் ஆதிக்கம் மேற்கு நாடுகளில் பரவியதால் அழிவுற்றது.

நாமும் கீரையின் முழு உபயோகத்தையும் பெற தரிசு நிலங்களில் கீரையைப் பயிரிடுவோம்.

செ. இ. கிறிஸ்தோபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுடர்

* மட்டக்களப்பு மாவட்டத்தின் சூழல், சுற்றுப்புறப் பாதுகாப்பில் பலர் அக்கறை உடையவர்களாய் இருக்கின்றார்கள். இவர்களின் சிந்தனைகள் அழுத்தமின்றி அமுங்கிக் கிடக்கின்றன. பலரின் குரல் ஒன்றாய்ச் சேர்ந்தால் சப்தமாக ஒலிக்கும் -- ஆர்வமுள்ளோர் "சூழல் சுடருடன்" தொடர்பு கொள்ளவும்.

* கிராமத்தின் சூழல் அபிவிருத்தியில் மக்களை ஈடுபடுத்தி கிராமத்தை முன்னேற்ற ஆர்வமுள்ள கிராமிய பொதுசன அமைப்புகளை எங்களுடன் தொடர்பு கொள்ள அழைக்கின்றோம்.

* "சூழல் விழிப்புணர்வுக் குழு"வின் மாசி மாத ஒன்றுகூடல் 6ஆந் திகதி நடைபெற்றது. சிவானந்தா வி., இந்துக் கல்லூரி, களுதாவளை ம.வி., செங்கலடி ம.வி., புனித சிசிலியா ம.ம.வி., தாழங்குடா ஸ்ரீ வி.வி. ஆகிய பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்களும் மாணவர்களுமாக 29 பேர்களும் சித்தாண்டி இளைஞர் கழகத்திலிருந்து ஒருவருமாக 30 பேர்கள் கலந்து கொண்டனர்.

* "சூழல் விழிப்புணர்வுக் குழு"வின் பங்குனி மாத ஒன்றுகூடல் 06ஆந் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு "மன்று" நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறும். இதில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

* ஜூன் 5ஆம் திகதி "உலக சூழல் தினம்". இதனையொட்டி "மன்று" சூழல், சுற்றாடல் சம்பந்தமான கட்டுரைக் கோவையை [illegible] வருடமும் வெளியிடத் தீர்மானித்துள்ளது. சிந்தனைக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

* காத்தான்குடி அநாதை இல்லம் "மன்று" நிறுவனத்தின் உதவியுடன் நகரக் குப்பைக்கூழங்களைக் கொண்டு கூட்டுப்பசளை தயாரிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது.

* மட்/களுதாவளை மகா வித்தியாலயத்தினர் மருதை, கூளா, இயூக்கலிப்ரஸ், சவுக்கு போன்ற கன்றுகளை உருவாக்கி விற்பனைக்குத் தயார் நிலையில் வைத்துள்ளனர்.

* மட்/செங்கலடி மகா வித்தியாலயத்தினர் சவுக்கு, மலைவேம்பு, மரமுந்திரிகை, பலா போன்ற கன்றுகளை உருவாக்கி விற்பனை செய்து கொண்டுள்ளார்கள்.

* மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தின் விவசாயப் பாடப் பிரிவினர் மாமரக் கன்றுகளை ஒட்டி, புதிய ஒட்டு மாங்கன்றுகளை விநியோகிக்கத் தயார் நிலையிலுள்ளனர்.

* "சூழல் சுடர்" பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை வரவேற்கின்றோம்.

---

உங்கள் கவனத்திற்கு :

"சூழல் சுடர்" ஒரு மாதாந்த வெளியீடு. இதைத் தொடர்ந்து பெற விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

"சூழல் சுடர்",
மன்று நிறுவனம்,
43, புகையிரத நிலையக் குறுக்கு வீதி,
மட்டக்களப்பு.

To,

Principal,
Bt/Kaluwankerney Vivekananda Vidyalayam,
Kaluwankerney.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org